# மாகாணக் கல்வித் திணைக்களம்

## வடக்கு மாகாணம்

## தமிழ் இலக்கிய நயம்

தரம் :- 10 நேரம் :- 2 மணித்தியாலம்

### பகுதி I

01 தொடக்கம் 05 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக?

01. "பாலைப்பண் வழிப்பறிக் கொள்ளையர்களின் கொடிய மனத்தையும் மாற்றி ஆயுதங்களை கீழே போட்டுவிடச் செய்யும்....."

அ. இக் கூற்று இடம் பெறும் நூல் யாது?
ஆ. நூலின் ஆசிரியர் யார்?

02. "கலகமே செயும் கண் இதுவாம் என
மலரம்பு ஐந்தையும் வைத்து வணங்கினான்.."

அ. 'வணங்கினான்' என்று குறிப்பிடப்படுபவன் யார்?
ஆ. மலரம்பு ஐந்தையும் குறிப்பிடுக?

03. "அன்ன காலையின் ஆண்தகை ஆளியும் பொன்னின் நல்நகர் வீதியில் புக்கனன்......"

அ. ஆண்தகை ஆளி என்பதன் கருத்து யாது?
ஆ. பொன்னின் நல்நகர் என குறிப்பிடப்படுவது யாது?

04. "வான் உறு மதியம் வந்தது என்று எண்ணி மலர்க்கரம் குவியுமென்று அஞ்சி..."

அ. மதியம் என்றால் என்ன?
ஆ. மலர்க்கரம் என்பது எவ்வகை அணி?

05. "குவளை உண்கண் குய்ப்புகை கழும்"

அ. கழும் எக்பதன் பொருள் யாது?
ஆ. 'குவளை உண்கண்' என்ற தொடரில் நீர் காணும் நயத்தினை விளக்குக?

(5 X 4 = 20 புள்ளிகள்)

02. கீழ்காணும் உரைப்பகுதியை அல்லது செய்யுட் பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக?

.....அடுத்த வீட்டுக் காளை தான் அந்தப் பசுவுக்குத் துணை, அதன் குழந்தையின் தகப்பன் அந்தச் செயல்களையும் அப்போது துள்ளிக்குதிக்கும் தன் கன்றுக் குட்டியைத் தான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது."பார்த்தாயா உன் மகனை உன்னைப் போலவே பிறக்கிறான்" என்று பசு தன் கண்களால் பேசிய பேச்சை அது புரிந்து கொள்ளாமல் இல்லை.

காளைக்கன்று ஓடியாடித் திரிந்து விட்டுத் தன் தாயின் அருகில் வந்து நின்றது. இதன் தோழனான குமரனும் கன்றுக்குட்டியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு பசுவின் அருகில் வந்தான். பசு இருவரையும் மாறி மாறி பார்த்தது. இரண்டு குழந்தைகளுமே தன் குழந்தைகள் என்பது போல் நாக்கால் குமரனையும் கன்றுக்குட்டியையும் மாறி மாறி தடவிக் கொடுத்தது.

ஒரு வகையில் பார்க்கப்போனால் குமரனும் தாய்ப்பசுவின் குழந்தைதான். மாடசாமியின் மனைவி அவனைப் பெற்று விட்டாளே தவிர, அவளிடம் பிள்ளையை வளர்ப்பதற்கு பால் இல்லை. பசுவின் பால் தான் இப்போது அவனுடைய தேகத்தில் ஓடும் இரத்தம் இரண்டு மூன்று நாட்கள் சென்றன. காளைக் கன்றுக்குட்டிக்கு கழுத்துச் சங்கிலியோடு வாய்ப்பூட்டான கூடையும் கிடைத்தது. நினைத்த நேரத்தில் பால் குடிக்க முடியவில்லை. பால் கறக்கும் நேரத்தில் மட்டும் கன்றுக்குட்டியை அவிழ்த்துவிடும் மாடசாமி சரியாக பால் சுரந்து வாய்க்கு வரும் நேரத்தில் அதை இழுத்துப் பிடித்து

கட்டி விட்டு கறக்கத் தொடங்கி விடுவான். அவன் கறந்து முடித்து விட்டு அவிழ்த்து விடும் போதே மடியில் ஒரு சொட்டுப் பால் கூட மீதமிருக்காது.

1) பசுவின் தாய்மை உணர்வை குறிப்பிடுக?
2) ஜீவகாருண்யத்தின் அவசியத்தை தெளிவுபடுத்துக?
3) விலங்குகளது உறவு, நேயம், இரக்கம் என்பவற்றை உதாரணங்களோடு விளக்குக?
4) மனிதர்களது இரக்கமற்ற தம்மையை விளக்குக?

(4+4+6+6 = 20 புள்ளிகள்)

அல்லது

தங்க வளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக்கமழுதையா - இதில்,
அங்கமெ லாம்மிகப் பொங்கி வழிந்திடும்
அன்புங் கலந்த தையா

கொட்டிய உப்புக் கசப்பதென்றாலுமுள்
கூடியினிக்கு தையா - இது
விட்டுப் பிரிகையிற் சொட்டுக் கண்ணீர் பட்ட
விண்ணின் அமுதமையா

சொன்னபடிநட வாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்த தையா - இது
சின்னஞ் சிறுகைக் குழந்தை யளைந்தது
தெய்வ அமுத மையா

ஆகக் கரிந்து பொரிந்ததென் றாலுமே
அன்பு மணக்கு தையா - இது
வேக வைக் காததென்றாலும் எனக் கொரு
விந்தை உருசி யையா

ஊது குழற்சத்தம் கேட்டவ திப்பட்டு
ஓடி வருகையிலே - இது
பாதி வழி வந்து தாமரைக்கைதந்த
பச்சை அமுதமையா

கட்டிய அன்புக் கயிற்றினிற் சுற்றிய
கட்டுப் பொதியி தையா - இதைத்
தொட்டுச் சுவைக்கையில் உள்ள மெல்லாமொரு
சோதி மிளிரு தையா.

01) மனைவி, கணவன் மீது கொண்ட அன்பு
02) மனைவி சமைத்த உணவை கணவன் புகழ்ந்துரைக்கும் விதம்
03) கணவன் மனைவிக்கு இடையிலான இல்லறப்பாங்கு
04) தலைப்பின் பொருத்தப்பாடு

(4+4+6+6+ = 20 புள்ளிகள்)

## பகுதி II

1 ஆம் வினாவுக்கும் ஏனைய 2,3,4,5 வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடையளிக்குக?

01. பின்வரும் கவிதையை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு 200 சொற்களில் விடை எழுதுக.

தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்ததொரு வேளை தன்னில்
இனித்த புவி இயற்கை யெழில் எல்லாம் கண்டேன்
இசைகேட்டேன்! மணம் மோந்தேன்!சுவைகள் உண்டேன்!
மனிதரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சின்
மகா சோதியிற் கலந்த தெகது நெஞ்சும்!
சனித்ததங்கே புத்துணர்வு ! புத்தகங்கள்
தருமுதவி பெரிது! மிகப் பெரிது கண்டீர்.

மனிதரெலாம் அன்பு நெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை
புனித முற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்.

தமிழர்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச்சாலை
சர்வகலசாலையைப்போல் எங்கும் வேண்டும்
தமிழிலிலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்
அமுதம் போல் செந்தமிழிற் கவிதை நூல்கள்
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூற்கள்
சுமைசுமையாய் சேகரித்துப் பல்கலை சேர்
துறைதுறையாய் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்.

நாலைந்து வீதிகளுக் கொன்று வீதம்
நல்லதுவாய் வசதியாய் இல்லம் வேண்டும்
நூலெல்லாம் முறையாக ஆங்கமைத்து
நொடிக்குநொடி ஆசிரியர் உதவுகின்ற
கோலமுறும் செய்தித்தாள் அனைத்தும் ஆங்கே
குவிந்திருக்க வகை செய்து தருதல் வேண்டும்
மூலையிலோர் சிறுநூலும் புதுநூலாயின்
முடிதனிலே சுமந்து வந்து தருதல் வேண்டும்.

வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும்
மரியாதை காட்டி அவர்க்கிருக்கை தந்தும்
ஆசித்த நூல் தந்தும் புதிய நூல்கள்
அழைத்திருந்தால் அதையுரைத்தும் நாளும் நூலை
நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம்
நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்
மாசற்ற தொண்டிழைப்பீர்! சமுதாயச்சீர்
மறுமலர்ச்சி கண்டதென முழக்கம் செய்வீர்!

1) புத்தக வாசிப்பில் கவிஞரின் அனுபவம்
2) புத்தகசாலையின் அவசியம்
3) கவிஞர் விரும்பும் புத்தகசாலை
4) "மாசற்ற தொண்டிழைப்பீர்! சமுதாயச்சீர்
   மறுமலர்ச்சி கண்டதென முழக்கம் செய்வீர்
   இவ்வடிகளின் மூலம் கவிஞரின் எதிர்பார்ப்பு
5) கவிஞரின் கவிச்சிறப்பு

(5 x 6 = 30 புள்ளிகள்)

02) விவேகசிந்தாமணியில்
அ. "தேன்நுகர் வண்டு...." பாடலில் கவிஞனின் கற்பனைத்திறன்
ஆ. மங்கையின் கண் அழகு வர்ணணை
இ. அணி வெளிப்பாடு
   என்பனவற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

03) "உரிமையும் கடமையும்" எனும் கட்டுரையில்
அ. "உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள்...." விளக்குக.
ஆ. உரிமை, கடமை, அன்பு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பினை விளக்குக.

(15 புள்ளிகள்)

04) கிஷ்கிந்தைப் படலத்தில்
அ. தாரையின் தோற்றமும் (அழகு) குணப்பண்புகளும்
ஆ. இராமனின் கோபம்
   வெளிப்படுமாற்றினைக் குறிப்பிடுக.

(15 புள்ளிகள்)

05) பத்தி எழுத்துக்களில்
அ. மரம் என்பது உயர்திணை என்பதற்கு கவிஞர் கூறும் கருத்துக்கள்
ஆ. மென்மையே வாழும் என்பதற்கு பத்தியாசிரியர் முன்வைக்கும் கருத்துக்கள் என்பவற்றைக் குறிப்பிடுக.

(15 புள்ளிகள்)